(6 pages) **Reg. No. : ....................................**

**Code No. : 22119** **Sub. Code : GMTA 61/ GMTC 61**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2016.

Sixth Semester

Tamil — Main

சங்க இலக்கியம்

(For those who joined in July 2012 and afterwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

சரியான விடையைத் தேர்வு செய்க.

1. தலைவியின் உயிர் ———— காமமோ பெரிதே

(அ) தவச் சிறிது (ஆ) இனிது

(இ) கொடிது (ஈ) அன்புடையது

2. ஐங்குறுநூறு மருதப் பாடல்களைப் பாடியவர் யார்?

(அ) கபிலர் (ஆ) ஓரம்போகியார்

(இ) ஔவையார் (ஈ) நப்பூதனார்

3. அகநானூறில் எந்த எண் உள்ள பாடல்கள் முல்லைத் திணைப் பாடல்கள்?

(அ) 10, 20.... (ஆ) 1, 3, 7...

(இ) 4, 14, 24 (ஈ) 5, 15, 25...

4. அருளும் அன்பும் அறனும் மூன்றும் நல்கும் கடவுள் யார்?

(அ) சிவன் (ஆ) திருமால்

(இ) கொற்றவை (ஈ) முருகன்

5. பல்யானை கொல்கெடு குட்டுவனைப் பாடிய புலவர் யார்?

(அ) பாலைக் கௌதமனார் (ஆ) ஔவையார்

(இ) குமட்டூர்கண்ணனார் (ஈ) பரணர்

6. நெட்டிமையார் பாராட்டிய பாண்டியன் யார்?

(அ) நெடுஞ்செழியன்

(ஆ) பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி

(இ) அறிவுடைநம்பி

(ஈ) கோச்டையான் ரணதீரன்

7. பொருநராற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன் யார்?

(அ) நெடுஞ்செழியன் (ஆ) அதியமான்

(இ) கரிகாலன் (ஈ) நன்னன்சேய் நன்னன்



*Nesamony Memorial Christian College, Marthandam*

8. கரிகாலனின் தந்தை யார்?

(அ) கிள்ளிவளவன் (ஆ) நெடுங்கிள்ளி

(இ) இராஜராஜசோழன் (ஈ) இளஞ்சேட்சென்னி

9. நெடுநல்வாடையின் ஆசிரியர் யார்?

(அ) நக்கீரர்

(ஆ) முடத்தாமக் கண்ணியார்

(இ) இறையனார்

(ஈ) இளநாகனார்

10. வேப்பம்பூ எந்தத் தமிழ் அரசருக்கு உரியது?

(அ) சோழன் (ஆ) பாண்டியன்

(இ) சேரன் (ஈ) பல்லவர்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு <u>250</u> சொற்களில் விடையளிக்க.

11. (அ) 'நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்' – யார் கூற்று? விளக்குக.

(அல்லது)

(ஆ) 'பாடுக பாட்டே!' – யார் கூற்று? விளக்குக.



12. (அ) முக்கோற்பகவர் செவிலிக்குக் கூறிய அறிவுரைகள் யாவை?

(அல்லது)

(ஆ) செவ்வேள் பிறப்பு பற்றிப் பரிபாடல் கூறுவன யாவை?

13. (அ) 'காடு உறு கடுநெறி' என்ற தலைப்பில் பல்யானை கொல்கெடு குட்டுவனை எவ்வாறு புலவர் போற்றுகிறார்?

(அல்லது)

(ஆ) பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதியை இரும்பிடர்த்தலையார் எங்ஙனம் பாராட்டி என்ன அறிவுறுத்துகிறார்?

14. (அ) முடிமுதல் அடிவரை பாடினியின் அழகினைப் பொருநராற்றுப்படை எங்ஙனம் வருணிக்கிறது?

(அல்லது)

(ஆ) வெண்ணிப் போர் வெற்றி குறித்து எழுதுக.

15. (அ) நெடுநல்வாடை காட்டும் அரண்மனையின் அமைப்பினை விவரி.

(அல்லது)

(ஆ) 'பலரொடு முரணிய பாசறைத் தொழில்' – விளக்குக.



Nesamony Memorial Christian College, Marthandam

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு 600 சொற்களில் விடையளிக்க.

16. (அ) 'நல்ல குறுந்தொகை' என்பதனை நும் பாடப்பகுதி வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) 'வேழப்பத்து' என்ற தலைப்பில் ஐங்குறுநூறு கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

17. (அ) வினை முடித்து மீளும் தலைமகன் விரைந்து இல்லம் சேரக் கூறும் காரணங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) திருப்பரங்குன்றத்தின் சிறப்பினைப் பரிபாடல் வழி விளக்குக.

18. (அ) பதிற்றுப்பத்து காட்டும் பல்யானைச் செல்கெழு குட்டுவனது ஆளுமைச் சிறப்பினைக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) 'செவியறிவுறூஉத்' துறையினை விளக்கி புறநானூற்றுப் பாடல்களைப் பொருத்திக் காட்டுக.



19. (அ) ஆற்றுப்படை இலக்கணம் கூறி, பொருநராற்றுப் படையைப் பொருத்திக் காட்டுக.

(அல்லது)

(ஆ) பொருநராற்றுப்படை வழி கரிகாலனின் சிறப்பினை விளக்குக.

20. (அ) நெடுநல்வாடை அகமா? புறமா? ஆய்க.

(அல்லது)

(ஆ) 'புனையா ஓவியம் கடுப்ப' என்ற தொடர் யாரைக் குறிப்பிடுகிறது? விளக்குக.

———————



Nesamony Memorial Christian College, Marthandam